101

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
சமூக கற்கைகள் துறை
சமூக விஞ்ஞானத்திற்கான சான்றிதழ் கற்கைநெறி , மட்டம் - 1
இறுதிப் பரீட்சை - 2007
இலங்கையின் நவீன வரலாறு - SSF 1301

காலம் - மூன்று (3) மணித்தியாலங்கள்

---

திகதி:08.10.2007 நேரம்: மு.ப.09.30 – 12..30 வரை

---

**ஐந்து (5) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**
**ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினாவையேனும் தெரிவு செய்க**

**ஒவ்வொரு வினாவுக்கும் 20 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்**

## பகுதி - 1

1. 14ஆம் நூற்றாண்டின் பின்னர் ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சிக்கும் மத சீர்திருத்தங்களுக்குமான காரணங்களையும் , அதன் விளைவுகளையும் சுருக்கமாக விளக்குக.

2. முதலாவது வெளிநாட்டவர் என்ற வகையில் போர்த்துக்கேயரது இலங்கை ஆதிக்கமானது இலங்கைச் சமூகத்தில் பொருளாதார , அரசியல் , சமூக மாற்றங்களை ஏற்படுத்தியது பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

3. இலங்கையில் போர்த்துக்கேயர் , ஒல்லாந்தர் ஆட்சி முடிவுறும்வரை அவர்களின் ஆட்சியில் காணப்பட்ட ஒற்றுமை , வேற்றுமை பற்றி கருத்துரைக்குக.

## பகுதி - 2

4. 1505ஆம் ஆண்டிலிருந்து மூன்று வெளிநாட்டவர் கண்டிய இராசதானியை கைப்பற்ற முனைந்த போதிலும் ஆரம்பம் முதலாக தனித்துவத்தைப் பேணிவந்துள்ளது. விளக்குக.

5. 16ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரையிலும் சுயதேவை பூர்த்தி பொருளாதாரமுறை மிகச் சிறப்பாக காணப்பட்டது. உதாரணங்களுடன் இம் முறையின் இயல்புகளை விளக்குக.

6. (அ) 1818 ஆம் ஆண்டு, 1848ஆம் ஆண்டு மலையகத்தில் ஏற்பட்ட கலகங்களுக்கான காரணங்களை விளக்குக.

(ஆ) இக் கலகத்தின் விளைவாக பிரித்தானியர் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட பிரதான நிர்வாக மாற்றங்களைக் குறிப்பிடுக

## பகுதி - 3

7. "இரட்டை பொருளாதார முறை" என்றால் என்ன? பெருந்தோட்ட பொருளாதார அறிமுகத்தின் பின் இலங்கைப் பொருளாதாரம் எவ்வாறு இரட்டை பொருளாதார முறைக்கு மாறியதென்பதை குறிப்பிடுக.

8. பின்வருவனவற்றின் ஏதாவது மூன்றுக்கு (3) சிறுகுறிப்பு எழுதுக.

(அ) அதிகாரி பிலிமத்தலாவ

(ஆ) றொபேர்ட் பிறவுன்றிக்

(இ) இலங்கையில் தானியவரி முறைமை

(ஈ) தலையிடாமையும் இலங்கையில் பிரித்தானியர் ஆட்சியும்

(உ) பயன்பாட்டு வாதம்

9. பிரித்தானியர் ஆட்சியில் புகையிரதம் மற்றும் வீதியின் அறிமுகம் இலங்கையின் பாரம்பரிய சமூக பொருளாதார முறையில் தாக்கத்தை ஏற்படுத்தியது.(சிறப்பாக மலையகப்பகுதியில்) உதாரணங்களுடன் விளக்குக.

(பதிப்புரிமையுடையது)